இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 6
இறுதிப் பரீட்சை- 2021/2022
**LLU6717 – சர்வதேச மனித உரிமைகள் சட்டம்**
காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

040

திகதி : 23 டிசம்பர் 2022 காலம் : மு.ப 9.30 – பி.ப 12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஏழு (07)

ஐந்து (5) வினாக்களுக்கு விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. மனித உரிமைகளுக்கும் சமயத்திற்கும் இடையிலான உறவு ஒரு வாதத்திற்குரிய உறவாகும். சில அறிஞர்கள் நவீன மனித உரிமைகளின் அடிப்படையானது புராதன சமய மற்றும் நாகரிகமடைந்த சம்பிரதாயங்களில் தங்கியுள்ளதாக வாதிட்டு இவை இரண்டிற்கும் இடையில் ஒரு ஆழமான உறவை இனம்கண்ட போதும் பிற அறிஞர்கள் நவீன மற்றும் மதச்சார்பற்ற மனித உரிமைகள் எண்ணத்தின் தோற்றுவாய்களை வலியுறுத்துகின்றனர்.

   இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? உமது தெரிவின் மீது குறைந்த பட்சம் இரு மதங்களிலிருந்து உதாரணங்களை அளித்து ஆராய்க.

   (20 புள்ளிகள்)

2. என் (N) எனும் நாடு ஆனது சில மாதங்களாக ஒரு தீவிர பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக என் (N) இன் அரசாங்கமானது "சிக்கன நடவடிக்கைகள்" என்று அறியப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது. இதற்கமைய அரசாங்கம் ஆனது பின்வரும் தீர்மானங்களை ஒரு அறிக்கையில் வெளியிட்டுள்ளது:

   - தசாப்த காலங்களாக அரசாங்கத்தால் பேணப்பட்டு வந்த வறுமை நிவாரண நிகழ்ச்சித்திட்டம் ஒன்றான "சௌபாக்கியா" எனும் திட்டத்திற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டை குறைத்தல். என் (N) இன் சனத்தொகையில் 25% ஆனோர் வறுமை கோட்டிற்கு கீழே இருப்பதாக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர்கள் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் நன்மைகளை பெறுபவர்கள் ஆவர்.
   - இதுவரை இலவசக்கல்வியை அளிக்கும் நிறுவனங்களாக செயற்பட்ட அரசாங்கப் பாடசாலைகளில் இருந்து கட்டணங்களை வசூலித்தல். சீருடைகள், பாடப்புத்தகங்கள், பாடசாலை மாணவர்களுக்கான உணவுகள் முதலான மானியங்களை மாணவர்களுக்கு வழங்குதல் நீக்கப்படுமெனவும் அரசாங்கம் தீர்மானித்தது.
   - அரசால் உரித்துக் கொள்ளப்பட்ட மின்சார மற்றும் நீர் சேவைகளை தனியார் மயமாக்குதல். இச்சேவைகளை சகலரும் அணுகுவதை உறுதிப்படுத்தும் வகையில் மானியக்கட்டணம் ஒன்றை கருத்திற் கொண்டு மின்சாரத்தையும் நீரையும் இதுவரை அரசாங்கம் வழங்கியது. தனியார் மயமாக்குதல் இம்மானியங்கள் வழங்குவதை மீளப் பெறும் என கணிக்கப்படுகிறது.
   - நாட்டின் ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு முக்கியமான சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழிற்சங்கங்களை உருவாக்குவதை தடை செய்தல். அரசாங்கம்

**THE OPEN UNIVERSITY OF SRI LANKA**

**FACULTY OF HUMANITIES AND SOCIAL SCIENCES**

**DEPARTMENT OF LEGAL STUDIES**

**LL. B DEGREE PROGRAMME**

**FINAL EXAMINATION -2021/2022**

**INTERNATIONAL HUMAN RIGHTS LAW- LLU6717**

**DURATION – 03 HOURS**

| Date: 23-12-2022 | Time: 9.30 am- 12.30 pm |
|---|---|

**Total no. of questions - 07**

**Answer five (05) questions only.**

**Marks will be deducted for Illegible handwriting.**

1. The relationship between religion and human rights is a contested relationship. While some scholars identify a deeper connection between the two, arguing that the roots of modern-day human rights lie in ancient religious and civilizational traditions, other scholars have emphasized the modern and secular origins of the human rights idea.

   Do you agree with this statement? Discuss with giving examples from at least two religions of your preference. (20 Marks)

2. N is a state which is encountering a serious economic crisis for several months. Due to the economic crisis, the government of N has decided to impose economic reforms which are also known as 'austerity measures'. Accordingly, the government in a statement declared the following decisions:

   - Reduce the budgetary allocation to the 'saubaghya' scheme which is a poor relief programme maintained by the government for decades. 25% of the population in N are considered to be living below the poverty line, and are recipients of the saubaghya scheme.
   - Charge fees from government schools which were hitherto functioned as entities providing free education. The government also decided to withdraw subsidies given to students such as meals for school children, textbooks, and uniforms.
   - Privatize state owned electricity and water services. The government so far provided electricity and water for a subsidized rate considering guaranteeing access to all for these services. It is assumed that the privatization would lead to the withdrawal of subsidies.

முதலீட்டாளர்களை கவர்வதற்கு இத்தகு தொழிற்சங்க நடவடிக்கைகள் பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவிக்கிறது.

என் (N) ஆனது பொருளாதார மற்றும் சமூக, கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் (ICESCR) ஒரு திறம் எனக் கருதுக. சமவாயத்தின் கீழ் என் (N) இனது கடப்பாடுகளை ஆராய்ந்தும் புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் இத்தகு கடப்பாடுகளுக்கு கீழ் அமையுமா என்றும் ஒரு குறிப்பை எழுதுக. மேற் குறிப்பிடப்பட்ட தீர்மானங்களை எடுத்துக்காட்டி கடப்பாடுகளை நீர் ஆராயுமாறு எதிர்பார்க்கப்படுகிறீர்.

(20 புள்ளிகள்)

3. மனித உரிமைகளுக்கான சார்புடமை அணுகுமுறையை கையாளும் விமர்சகர்கள் நவீன மனித உரிமைகள் திட்டத்தின் உலகளாவிய கோரிக்கையை வாதத்திற்கு உட்படுத்துகின்றனர். இத்தகு விமர்சகர்களுக்கு மனித உரிமைகள் ஆனவை உலகளாவியது என்பதும் மனித உரிமைகள் பெறுமானங்களை சகல சமூகங்களும் பின்பற்ற வேண்டும் என்பதும் மேற்கத்தேய நாடுகள் மேற்கத்தேயமற்ற சமூகங்களை அடக்கும் குறிக்கோளுடன் "கலாசார ஏகாதிபத்தியத்தின்" ஒரு வடிவத்தை பிரதிநித்துவப்படுத்துவதாக கருதுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட கூற்றிற்கு அமைய சமகால மனித உரிமைகக் கட்டமைப்பில் கலாசார சார்புடமை விமர்சிப்பின் பொருத்தப்பாட்டை கணிக்க.

உமது விடைகள் பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுகள் மற்றும் உதாரணங்களால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

(20 புள்ளிகள்)

4. சிலிக்கன் குடியரசு எனும் நாடு ஆனது சில காலமாக வேறுபட்ட இனக்குழுக்களிடையேயான பதற்றங்களுக்கு முகங்கொடுக்கின்றது. பிராந்தியங்களை சார்ந்த சில தனிநபர்கள் தனிகிளர்ச்சிக் குழுக்களை உருவாக்கும் அச்சுறுத்தல் எழுந்துள்ளதன் காரணமாக "தீவிரவாதத்தை அடக்கும் சட்டம்" என்று அறியப்பட்ட புதிய தீவிரவாத தடை சட்டத்தை சிலிக்கன் பாராளுமன்றம் ஆக்கியது. தீவிரவாதத்தை அடக்கும் சட்டமானது நாட்டின் சாதரண சட்டங்களிலிருந்து வேறுபட்ட சில உறுப்புரைகளை கொண்டுள்ளது.

சில உறுப்புரைகள் பின்வருமாறு:

- தீவிரவாதி என சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைய பொலிஸ் மற்றும் இராணுவத்தால் இரு வருட காலத்திற்கு தடுத்து வைக்கப்பட முடியும். நாட்டின் பொதுவான குற்றவியல் நடபடி சட்டத்தின் கீழ் சந்தேகத்திற்கு உட்பட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு 24 மணித்தியாலங்களுள் நீதிபதிக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் அந்நபரை தடுத்து வைப்பது குறித்து ஒரு நீதிபதியால் தீர்மானிக்கப்படும்.

- கட்டுக்காவலில் உள்ள போது பெறப்படும் அறிக்கைகள் நீதிமன்றின் முன்னர் சான்றாக வைக்கப்படும். நாட்டின் பொதுவான குற்றநடபடிக்கமைய பொலிஸ் சந்தேக நபர்களை வற்புறுத்தி பொய்யான "குற்ற ஒப்புதல்களை" ஆக்குவதற்கு எதிரான ஒரு பாதுகாப்பாக கட்டுக்காவலின் போது பெறப்படும் அறிக்கைகள் சான்றாகக் கருதப்படுவதில்லை.

- Prohibit forming trade unions in Free Trade Areas which are vital for the export economy of the country. The government states that union activities might result in discouraging attracting investors.

Assume that N is a party to the International Covenant on Economic, Social and Cultural Rights (ICESCR). Write a note discussing the obligations of N under the convention, and whether the new economic reforms are in accordance with these obligations. You are expected to discuss the obligations with reference to the decisions mentioned above.

(20 Marks)

3. Critics who have taken a relativist approach to human rights contend the universality claim of the modern human rights project. For these critics, the claim that human rights are universal and all societies should adhere to human rights values represents a form of 'cultural imperialism', where the countries of the west aim to dominate non-western societies.

In light of the above statement, evaluate the relevance of the cultural relativist critique to the contemporary human rights discourse.

Your answer should be supported with relevant legal authorities and examples.

(20 Marks)

4. Republic of Silicon is a country experiencing tensions between different ethnic groups for some time. Due to the emerging threat of certain individuals belonging to regional areas forming separatist rebel groups, the Parliament of Silicon enacted a new anti-terror law known as the 'Suppression of Terrorism Act' (STA). The STA contained several provisions which were different from the ordinary laws of the country.

Some of these provisions are as follows:

- The police and armed forces can detain a person who is suspected as a terrorist for a period of two years based on a directive issued by the Minister of Defense. Under the general criminal procedure law of the country, a suspect has to be produced before a Magistrate within 24 hours of the arrest and whether to detain the person further or not is decided by the Magistrate.

- Statements obtained while in custody are admissible as evidence before a court of law. According to the general criminal procedure of the country, statements given while at the custody are not considered as evidence as a safeguard against the police forcing suspects to make false 'confessions'.

- தீவிரவாதத்தை அடக்கும் சட்டம் ஆனது தீவிரவாதத்தை "நேரடியாக அல்லது மறைமுகமாக" உயர்த்தும் ஏதேனும் தாபனங்கள் அல்லது நிலையங்கள் என்பவற்றை குறித்துரைக்க பாதுகாப்பு அமைச்சிற்கு அதிகாரம் அளித்துள்ளது.

அமைச்சர் இவ்வுறுப்புரைகளில் தங்கி பிரிவினையை அனுதாப ரீதியாகக் கோரும் அதேவேளை அக்கோரிக்கையை அடைய பலப்பிரயோகத்தை பயன்படுத்துதல் குறித்து விமர்சிக்கும் "த வொயிஸ் ஒப் ரீஜன்ஸ்" எனும் பத்திரிகையை தடை செய்தார். பத்திரிகையின் இயக்குனர் தீவிரவாத குற்றத்தை இழைத்ததன் சந்தேகத்தின் கீழ் தடுக்கப்பட்டார்.

சிலிக்கன் ஆனது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தினதும் (ICCPR) அதன் முதலாவது மேலதிக பொருத்தனையினதும் (First optional protocol) ஒரு திறம் எனக்கருதுக. மேலும் இலங்கையை ஒத்த சட்டமுறைமையொன்றை சிலிக்கன் கொண்டுள்ளது என்றும் கருதுக.

(அ) சிலிக்கனின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளின் அடிப்படையில் தீவிரவாதத்தை அடக்கும் சட்டத்தின் மேற்குறிப்பிட்ட குறித்த உறுப்புரைகளின் வலிதாந்தன்மையை ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) சர்வதேச மனித உரிமைகளின் கீழ் வொயிஸ் ஒப் ரீஜன் இயக்குனருக்கு கிடைக்கத்தக்க நிவாரணங்கள் எவை என விளக்குக.

(08 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

5. சர்வதேச குற்றவியல் சட்டமானது சர்வதேச சட்டப்பரப்பின் புதிய அபிவிருத்தி ஆகும். சர்வதேச குற்றங்களின் மீது "தனிப்பிட்ட குற்றவியல் பொறுப்புடமையை" வலியுறுத்துவதால் சர்வதேச குற்றவியல் சட்டம் தனித்துவமானது ஆகும்.

(அ) சர்வதேச குற்றங்கள் எனும் கருத்தேற்பை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) சர்வதேச குற்றவியல் சட்ட விருத்திற்கு பின்வரும் நிகழ்வுகளின் பங்களிப்பை ஆராய்க.

i. நியுரம்பேர்க் விசாரணைகள்

ii. ஐக்கிய நாடுகளின் இடைக்கால நியாய சபைகளின் உருவாக்கம்

iii. சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நியதிச்சட்டத்தின் ஏற்பு

(15 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

6. பெண்களின் உரிமைகள் குறித்து பணியாற்றும் சர்வதேச தாபனமொன்றிற்கான நாட்டின் பிரதிநிதி நீர் எனக்கருதுக. பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கையின் உறுப்புரைகளை (CEDAW) இலங்கை கடந்த இரண்டு தசாப்தங்களாக பின்பற்றியுள்ளமை குறித்து ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீர் வேண்டப்படுகிறீர். இந்த அறிக்கைக்கான சுருக்கமொன்றை தயாரிக்க. உமது சுருக்கத்தில் பொருத்தமான பொருத்தனைகள் மற்றும் இலங்கையின் நியதிச் சட்ட ஏற்பாடுகள் குறித்து ஆராய்க.

(20 புள்ளிகள்)

- The STA also empowered the Minister of Defense to proscribe any organization or outlet that 'directly or indirectly' promote terrorism.

The Minister, relying on these provisions, prohibited the news outlet called 'The Voice of Regions' which viewed the demand for secession sympathetically, but was also critical about using armed force to achieve the demand. The director of the news outlet was detained on the suspicion of committing the offence of terrorism.

Assume that Silicon is a party to the International Covenant on Civil and Political Rights (ICCPR) and its first optional protocol. Also assume that Silicon has a legal system similar to Sri Lanka.

(a) Discuss the legality of the above mentioned specific provisions of the STA in the light of international human rights obligations of Silicon. (12 Marks)

(b) Explain what remedies available to the Voice of Regions director under international human rights law. (8 Marks)

(20 Marks)

5. International criminal law is a relatively modern development in the area of international law. International criminal law is unique due to its emphasize on 'individual criminal responsibility' on international crimes.

(a) Explain the notion of 'international crimes'. (5 Marks)

(b) Discuss the contribution of following events to the development of international criminal law.

I. Nuremberg trials

II. The establishment of UN ad hoc criminal tribunals

III. The adoption of the Statute of the International Criminal Court

(15 Marks)

(20 Marks)

6. Assume you are the country representative of an international organization working in the field of women's rights. You are requested to submit a report about the compliance of Sri Lanka in the last two decades with the provisions of the Convention on Elimination of all forms of Discrimination against Women (CEDAW). Prepare a summary for the report. You should discuss the relevant provisions of the treaty and legislative enactments in Sri Lanka in your summary.

(20 Marks)

7. பின்வருவன மீது சிறுகுறிப்புகள் எழுதுக.

(அ) சர்வதேச ஆவர்த்தண முறைகள் மீளாய்வு (Universal Periodic Review)
(ஆ) மனித உரிமைகளுக்கான மன்றம் (United National Human Rights Commission)
(இ) சிறுவரிற்கான சிறந்த அக்கறை (Best interest of the child)
(ஈ) இலங்கையில் சிறுவர்களுக்கான உரிமைகள் (Rights of children in Sri Lanka)

(04 x 05 = 20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது

7. Write brief notes on the following.

(a) Universal Periodic Review

(b) United Nations Human Rights Commission

(c) Best interest of the child

(d) Rights of children in Sri Lanka (4×5=20 Marks)

***